DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 488 / 2014 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 3 |
| Name | திரு. முத்து துரை |
| Father Name | அருணாச்சலம் |
| Village | உமரிகாடு |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 46 |

**(பிரிவு 299 குவிமுச வின் படி சாட்சியம் சமூக நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படுகிறது. )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 20-01-2026.(நேரம்: 12.41PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது உமரிகாட்டில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன்.

3.என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முத்து துரை என்ற இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான்.**அந்த பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4.சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் மாலை 04.00 மணியளவில் வைத்து ஏரல் போலிசார் உமரிகாட்டில் மெயின் ரோட்டில் உள்ள எனதுகடையின் அருகில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெபத்து போட்டுக்கொடுத்தேன்.

5. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும்தெரியாது.

6.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 3 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது.

அ.சா 3ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 27.02.2014 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் நானும் சாட்சி பிரபாகரும், அருள்ராஜ் என்பவரின் வீட்டின் முன்பு நின்றுக்கொண்டிருக்கும்போது ஏரல் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் வழக்கு சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல.மேற்படி விவரத்திற்கு நாங்கள் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றுபோலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 488 / 2014 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 4 |
| Name | திரு. திருமணி என்ற செல்வராஜ் |
| Father Name | பெரியசாமி |
| Village | உமரிகாடு |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 48 |

**(பிரிவு 299 குவிமுச வின் படி சாட்சியம் சமூக நீதிமன்றத்தால் பதிவு செய்யப்படுகிறது. )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 20-01-2026.(நேரம்: 12.41PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது உமரிகாட்டில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் விவசாய வேலை செய்து வருகிறேன்.
3. இவ்வழக்கின் எதிரி கணேசனை எனக்கு தெரியாது.
4. சாட்சி பன்னீர் செல்வம் என்பவரையும் எனக்கு தெரியாது.
5. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை.,
6. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும்தெரியாது.
7. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 4 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 4ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 28.02.2014 ஆம் தேதி காலை 06.00 மணியளவில் நானும், சாட்சி பன்னீர் செல்வமும் அம்மாள்தோப்பு பஸ் நிலையம் அருகில் நின்றுக்கொண்டிருக்கும்போது இவ்வழக்கின் எதிரி கணேசனை எங்கள் முன்னிலையில் விசாரிக்க அவர் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரி கணேசனை அவரது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்து வழக்கு சொத்து பொருளை அதே தேதி காலை 08.00 மணிக்கு எங்கள் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்ததை ஏரல் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றி அத்தாட்சி பிறப்பித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.மேற்கண்ட இரு விவரங்களுக்கும் நாங்கள் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.